₹100/-

4 - 6

ஞானகுரு

# மகிழ்ச்சி

ஆனி 2025

எஸ்.கே.முருகன்



## பணம் மிச்சப்படுத்தும் ஷாப்பிங்



Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஞானகுரு கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு : +91 80725 89355

www.gyaanaguru.com



ஆசிரியர் பக்கம்

# பிறர் விருப்பத்துக்கு மரியாதை..!



தன்னுடைய ரசனை, தன்னுடைய தேர்வு, தன்னுடைய கணிப்பு, தன்னுடைய சிந்தனை மற்றவர்களை விட உயர்வானது என்ற எண்ணம் பெரும்பாலான நபர்களிடம் ஆணித்தரமாக ஒளிந்திருக்கிறது. அதனால் ஆடை, படிப்பு, வேலை, மணப்பெண், மணமகன் தேர்வு போன்றவைகளை பிறருக்காக தாங்களே முடிவு செய்கிறார்கள்.

இந்த விஷயத்தில் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்ன தெரியுமா..?

நாம் ஆசையாகத் தேர்வு செய்து அணிந்திருக்கும் ஆடை, செருப்பு, செல்போன், வாட்ச் போன்றவை, எத்தனையோ நபர்களால் பிடிக்கவில்லை என்று நிராகரிக்கப்பட்டவை. மலிவானது என்று விமர்சிக்கப்பட்டவை. கேலியாக கருதப்பட்டவை என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

எனவே, இந்த உலகில் சரி, தவறு, அழகு, அழகின்மை என எதுவும் கிடையாது. உண்மை, பொய் என்று எதுவும் இல்லை. இந்த உலகத்தில் திட்டவட்டமானது என்று எதுவுமே கிடையாது.

மிகவும் சரியான மனிதர், முழுமையான மனிதர் என்று யாரும் இல்லை. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதே உண்மை. நமக்கு என்ன தேவையோ அதை தேர்வு செய்ய நமக்கு முழு உரிமை உண்டு. அதே போன்று ஒவ்வொரு நபருக்கும் அவர் விரும்பியதை தேர்வு செய்வதற்கும், பிடித்ததைச் செய்வதற்கும் சுதந்திரம் உண்டு.

எனவே, பிறர் விருப்பத்தை கிண்டல் செய்வது, பிறருடைய விருப்பத்தில் தலையிடுவது அவர்களை அவமானப்படுத்துவதற்கு சமம்.

பிறர் விருப்பத்தை மதிப்பதும் ஏற்றுக்கொள்வதும் அந்த உறவை மேம்படுத்துகிறது. நம்பிக்கையை உருவாக்குகிறது, அன்பை விதைக்கிறது. எனவே, எல்லோரையும் அவரவர் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவே மகிழ்ச்சி.

www.gyaanaguru.com

# நடிகைகளின் கவர்ச்சிக்கு என்ன அர்த்தம்..?


சினிமா தொடர்பான விழா மேடைகளில் ஒரு காட்சியை எல்லோரும் பார்க்க முடியும். நடிகைகள் கவர்ச்சியான ஆடையுடன் மேடைக்கு வருவார்கள். குட்டியான கீழாடை அணிந்திருப்பார்கள். அதை மறைப்பதற்கு ரொம்பவே சிரமப்படுவது போன்று தொடையை நெருக்கி உட்கார்ந்தபடி நெளிவார்கள். அதேபோல், சேலை உடுத்திவரும் நடிகைகள், அடிக்கடி மாராப்பை சரி செய்வது போன்று இழுத்துவிட்டு கூடுதல் கவர்ச்சி காட்டுவார்கள். அந்த நடிகை சேலை உடுத்தாமல் மாடர்ன் உடையில் வந்திருந்தால் அத்தனை பேரும் அதை கவனித்திருக்க மாட்டார்கள். ஆனால், அந்த பெண் அதையே விரும்புகிறாள். சேலையை அடிக்கடி விலக்குவதும் மூடுவதும் அனைவரது கவனத்தையும் ஈர்ப்பதற்காகவே செய்யப்படுகிறது. இதனை அந்த நடிகை முழு விருப்பத்துடன் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு வகையில், அப்படி கவர்ச்சி காட்டுவதற்காக அவருக்கு கூடுதல் சம்பளம் படத் தயாரிப்பாளர் கொடுத்திருப் பதற்கு வாய்ப்பு உண்டு. கவர்ச்சி காட்டுவதன் காரணமாக அவருக்கு மேலும் சில படம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு என்றும் அவர் திட்டமிட்டு ஆடையைக் குறைத்திருக்கலாம். சினிமா, மாடலிங் போன்ற உலகில் பெண்ணுக்கு உடலே மூலதனம் என்பதால் அதை மார்க்கெட்டிங் செய்வதில் எந்த தவறும் இல்லை.

சினிமா நடிகைகள் மட்டுமின்றி சாதாரண பெண் களிடமும் இந்த கவர்ச்சி காட்டும் குணத்தைக் காண முடியும். தங்கள் மனதுக்குப் பிடித்தவர்கள் பார்த்து ரசிக்க வேண்டும் என்பதற்காக புதிய ஆடை, அணிகலன்கள் அணிந்துவருவார்கள். அதனை சம்பந்தப்பட்ட




www.gyaanaguru.com



நபர் கவனித்து பாராட்டு தெரிவிக்கும் வரை வெவ்வேறு வழிகளில் அதை வெவ்வேறு வகையில் உணர்த்திக்கொண்டே இருப்பார்கள். ஆண், பெண் என இருவரும் எதிர்பாலினத்தைக் கவர்வதற்கு அலங்காரம் செய்வது, ஆடையைக் குறைப்பது, பந்தா காட்டுவது போன்றவை இயல்பு தான், இதில் யார் மீதும் எந்தத் தவறும் கிடையாது. ஏனென்றால், உயிர்களை அதிக அளவு உற்பத்தி செய்வதற்கு இயற்கையாக ஹார்மோன் சுரப்பதால் வரும் திருவிளையாடல். பொதுவாக எல்லா உயிரினங்களிலும் ஆண் இனமே பெண்களைக் கவர்வதற்கு அதிகம் மெனக்கெடுகிறது. ஆண் மயில் ஆடுகிறது. ஆண் சிங்கம் பிடறியைக் காட்டி கர்ஜிக்கிறது. ஆண் நாய் வீரத்தைக் காட்டுகிறது. மனித இனத்தில் மட்டுமே கொஞ்சம் வித்தியாசம். ஆண்களைக் கவர்வதற்கு பெண்கள் அதீத ஆடை அணிகிறார்கள் அல்லது ஆடையைக் குறைக்கிறார்கள்.

ஆடை என்பது பெண்ணின் விருப்பம் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், ‘நான் எத்தனை குறைவான ஆடை உடுத்திக்கொண்டு வந்தாலும், அதை மற்ற ஆண்கள் பார்க்கக்கூடாது, ஆபாசம் என்று முத்திரை குத்தக்கூடாது..” என்று உரிமைக்குரல் எழுப்புவதே சர்ச்சையாகிறது.

‘என் உடல் என் உரிமை என்பது வீட்டுக்குள் இருக்கும் வரை சரி. பொதுஇடங்களில் கண்ணியமாக உடை இருக்க வேண்டும்’ என்பது ஆண்களின் குரலாக இருக்கிறது. ‘ஆடையை ஒழுங்காக உடுத்திக்கொண்டு வந்தால் நாங்கள் ஏன் பார்க்கப்போகிறோம்?’ என்ற கேள்விக்கும், ‘பெண்கள் உடல் முழுவதையும் மறைக்கும் வகையில் உடை அணிய வேண்டும்’ என்ற உத்தரவுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை. இவை எல்லாமே ஆண்களின் ஆணவத்தைக் காட்டும் வார்த்தைகள்.

நீ இப்படி உடை அணிந்தால் அவன் அப்படித்தான் பார்ப்பான், ஆணை பெண்ணின் ஆடையே தூண்டிவிடுகிறது என்றெல்லாம் கூறுவது ஆண்களை அவமானப்படுத்துவது ஆகும். ஆடை மூலமே பெண்ணை ஆண் பார்க்கிறான் என்றால் அவனுடைய ஆறாவது அறிவு எங்கே போகிறது. அவனது சகோதரி அல்லது தாய், மகள் அப்படி குறைவாக ஆடை உடுத்தியிருந்தாலும் அவன் தூண்டப்படுவானா என்பது முக்கியமான கேள்வி.

ஒரு பெண்ணை அவள் உடுத்தியிருக்கும் ஆடைக்காக அவமானப்படுத்துவதற்கு, கிண்டல் செய்வதற்கு, தொடுவதற்கு எந்த ஆணுக்கும் உரிமை இல்லை. பெண்ணின் அனுமதி இன்றி அவளைத் தொடக்கூடாது என்பதே அறிவு, இதை சிறுவனாக இருக்கும் காலத்தில் இருந்தே சொல்லி வளர்க்க வேண்டியது அவசியம்.

அதேபோல் பெண், ‘எனக்குப் பிடித்த ஆடையை நான் அணிகிறேன். எனக்குப் பிடித்த வகையில் உடுத்துகிறேன். கவர்ச்சியாக இருப்பதை நான் விரும்புகிறேன். என்னை தொந்தரவு செய்யாமல் ஆண்கள் ரசிப்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை’ எனும் அளவுக்கு தெளிவுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். யார் பார்த்தால் என்னக்கென்ன என்று கண்டுகொள்ளாமல் நடக்கும் தைரியம் வேண்டும்.

ஆண்களால் ஆண்களுக்காக உருவாக்கப்பட்ட உலகத்தில் பெண்கள் மிகுந்த சிரமத்துடன் ஒவ்வொரு நாளையும் கழித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் ஆணின் விருப்பத்தை மதிக்காத மனைவி, ஆணின் சொல்லைக் கேட்காத மகள் இன்றும் கொலை செய்யப்படுகிறார்கள். நிர்வாணமாக போஸ் கொடுப்பதை சில பெண்கள் புரட்சி என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களைப் பார்த்து ஆண்கள் அச்சப்படுகிறார்கள் அல்லது வெறுக்கிறார்கள். உடல் என்பது வெகுமானமும் இல்லை, அவமானமும் இல்லை என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

விரும்பும் உடையை போட்டுக்கொண்டு திரியும் சுதந்திரம் பெண்ணுக்கு வர வேண்டும். இன்னமும் அப்படியொரு சூழ்நிலை வரவில்லை என்பதே உண்மை. இதை உருவாக்கும் கடமை பெண்ணுக்கு உண்டு. ஒவ்வொரு அம்மாவும் தன்னுடைய மகனுக்கு ஆடை சுதந்திரம் பற்றி கற்றுத்தர வேண்டும்.

ஆடையில் எதுவும் தவறு இல்லை, பார்வையில் மட்டுமே தவறு இருக்கிறது என்பதை சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். அப்படியொரு நிலை வரும்போது பெண்கள் உடையை ஆபாசமாக ஆண்கள் பார்க்க மாட்டார்கள். அது, ஆடையாக மட்டுமே தெரியும்.

www.gyaanaguru.com





# கவித்துவம்

முழு நிர்வாணமான  
ஆணின்  
ஒரு முழ துணியையும்  
ஆடை என்கிறார்கள்.  
முழுதாய் உடுத்தியிருக்கும்  
பெண்ணின் ஆடை  
ஒரு அங்குலம் விலகினாலும்  
ஆபாசம் என்கிறார்கள்.

– M.பாஸ்கர்

www.gyaanaguru.com

# முடியாது என்பதை எல்லாம், யாராவது ஒருவர் முடித்து விடுகிறார்




வாழ்க்கை விசித்திரமானது. ஒவ்வொரு நபரின் வெற்றிக் கதையும் மற்றவருக்கு உத்வேகம் தரக்கூடியது. முடியவே முடியாது என்பதை எல்லாம் யாராவது எங்காவது முடித்துவைக்கிறார்கள். சாதனை என்று தெரியாமலே பல சாதனைகள் செய்யப்படுகின்றன. இதற்குத் தேவை உத்வேகம், முயற்சி, ஊக்கம் மற்றும் நம்பிக்கை. இதை சொல்லும் உண்மையான வாழ்க்கைக் கதை இது.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கணித பேராசிரியர் பாடத்தை நடத்திக் கொண்டு இருந்தார். அவர் பாடம் நடத்தத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே அந்த மாணவனுக்கு உறக்கம் கண்களை சொக்கிக் கொண்டு வந்தது. கடைசி பெஞ்சில் இருந்த அந்த மாணவன், அவனையும் அறியாமல் உறங்கிவிட்டான். மணி அடித்த பிறகே விழிப்பு வந்தது. அவன் திருதிருவென விழித்த நேரத்தில் அத்தனை மாணவர்கள்ம் ஆசிரியரும் வெளியேறிவிட்டார். கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தான். வகுப்பில் உறங்கியதை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டே கரும்பலகையைப் பார்த்தான். பேராசிரியர் கரும்பலகையில் இரண்டு கணிதங்களை கேள்வியாக எழுதி வைத்திருந்தார்.

அவனுக்கு புரிந்து போனது. ஆசிரியர் அசைன்மென்ட் கொடுத்திருக்கிறார். உடனே நோட்டில் அந்த இரண்டு கணித கேள்விகளையும் எழுதிக்கொண்டு வீட்டிற்கு புறப்பட்டான். மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து தான் கணித வகுப்பு வரும். அதற்குள் அதற்கு விடை எழுதி விடலாம் என நினைத்து வீட்டில் உட்கார்ந்து கணக்கிற்கு விடை எழுதிப் பார்த்தான். வரவில்லை. வகுப்பறையில் பாடத்தை கவனிக்காமல் போனது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை எண்ணி தன்னை தானே நொந்து கொண்டான்.

தூங்கிவிட்டதை மற்ற மாணவர்களிடம் சொல்லி விடை கேட்டு அவமானப்படுவதற்கு அவன் விரும்பவில்லை. எனவே, தொடர்ந்து இரண்டு



நாட்கள் நூலகத்திற்கு சென்று புத்தகங்களை எடுத்து அதிசிரத்தையுடன் படித்துக் கடுமையாகப் போராடியதில் ஒரு கேள்விக்கான விடை வந்தது. இன்னொரு கேள்விக்கு தீர்வு காண்பதற்கு அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை.

மற்றொரு கேள்விக்கு பதில் எழுதாமல் போனதற்கு கடுமையாக திட்டு கிடைக்கும் என நினைத்துக் கொண்டே இரண்டு நாட்கள் கழித்து வகுப்பறையில் உட்கார்ந்து இருந்தான். கணிதப் பேராசிரியர் வந்தார். பாடங்களை நடத்தினார். வகுப்பு முடிந்ததும் வெளியே கிளம்ப தயாரானார். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அசைன்மென்ட் கொடுத்ததை பேராசிரியர் மறந்துவிட்டாரோ?

வேகமாக எழுந்து பேராசிரியரிடம், "சார்... நீங்க அசைன்மென்ட் கொடுத்த இரண்டு வினாக்களில் ஒன்றுக்கு விடை எழுதி விட்டேன். மற்றொன்றுக்கு விடை எழுத நேரம் கிடைக்கவில்லை. எனக்கு இன்னும் இரண்டு நாட்கள் கூடுதல் அவகாசம் கொடுத்தால் அதற்கும் விடை எழுதி விடுவேன்" என்றான்.

பேராசிரியருக்கு எதுவும் புரியவில்லை. எனவே, "நான் யாருக்கும் அசைன்மென்ட் எதுவும் கொடுக்கவில்லையே. அந்த ரெண்டு வினாக்களில் ஒன்றுக்கு விடை எழுதிட்டேன்னு வேற சொல்ற. எனக்கு ஒண்ணும் புரியலை. உன் விடையைக் காட்டு பார்ப்போம்" என்று கேட்டார்.

உடனே மாணவன் அந்த கணிதத்தைக் காட்டினான். அதை பார்த்த பேராசிரியர் அதிர்ந்து போனார்.

"இதுக்கு விடை எப்படி கண்டுபிடிக்க முடிந்தது,..?"

அந்த மாணவன் குற்றவுணர்வுடன், "நீங்க பாடம் எடுத்த போது என்னையும் அறியாமல் உறங்கி விட்டேன். மற்ற மாணவர்களிடம் இந்த வினாக்களுக்கு விடை கேட்பதற்கும், நீங்கள் வகுப்பறையில் என்ன பாடம் நடத்தினீர்கள் என்பதைக் கேட்டு தெரிந்து கொள்வதற்கும் எனக்கு அவமானமாக இருந்தது. அதனால் நானாக முயற்சி செய்து பல புத்தகங்களைப் படித்து விடை எழுதினேன்..." என்றான்.

பேராசிரியர் அவனை கட்டிப்பிடித்துக் கொண்டு ஆனந்த கூத்தாடினார். "உலகின் மிகச்சிறந்த கணித வல்லுனர்களாலும் தீர்க்கப்பட முடியாத பல கணக்கு வினாக்கள் இருக்கின்றன. உதாரணமாக அவற்றில் இரண்டை எழுதுகிறேன் எனச் சொல்லி நான் எழுதிய வினாக்கள் தான் அவை. அதற்கு நீ விடை கண்டுபிடித்து இருக்கிறாய் என்பதை நினைக்கும்போது என்னால் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. உன்னுடைய திறமை அளப்பரியது" என்று கொண்டாடினார்.

அந்த மாணவன் முதல் வினாவிற்கு விடை கண்டுபிடித்த நான்கு தாள்கள் இன்னும் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இருக்கின்றன. அந்த மாணவன் தான் உலகப் புகழ்பெற்ற அமெரிக்க கணிதவியலாளர் ஜார்ஜ் பெர்னார்டு டான்சிக் (George Bernard Dantzig). பின்னாளில் அவர் மாணவர்களிடையே உரையாடிய பொழுது, 'சில நேரங்களில் நாம் தவறவிட்ட சந்தர்ப்பங்கள் கூட, நம்மை முன்னேற்றும் படிக்கற்களாக அமைகின்றன.

இதற்கு விடை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை என எனது கணிதப் பேராசிரியர் சொன்ன வார்த்தைகள் அன்று என் காதுக்குள் விழுந்திருந்தால், என்னுடைய உளவியலானது நம்மாலும் இந்த கணக்கை போட முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கும். ஆனால் நான் பாடத்தை கவனிக்காமல் தவறு செய்து விட்டேன் என்கின்ற குற்ற எண்ணமே என்னை தனிச்சையாகப் போராட வைத்தது. அந்தப் போராட்டமே பல சிக்கலான கேள்விகளுக்கு தீர்வு காண வைத்தது. இது கணித விடைக்கு மட்டுமான பதில் அல்ல. அனைத்து பிரச்சினைகளுக்குமான பதில்.

அதனால் சில நேரங்களில் நீங்கள் காதுகளை மூடிக்கொள்வதும் நல்லது தான். மற்றவர்களின் விமர்சனங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் நல்லது தான். மற்றவர்களின் எண்ணங்களையும் முடிவுகளையும் நமக்குள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதும் நல்லது தான். ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் தவறவிட்டால், மறு சந்தர்ப்பத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி உருவாக்கி நீங்கள் அதில் உங்கள் உழைப்பையும் செலுத்திவிட்டால்... உலகத்தில் விடை காண முடியாத வினாக்களுக்கு விடை காணும் ஒவ்வொரு நேரத்திலும் நீங்களும் ஜார்ஜ் பெர்னார்டு டான்சிக் தான்.

நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் விஞ்ஞானியாகிப் போவதும், அஞ்ஞானியாகிப் போவதும் காலத்தின் கைகளில் இல்லை. உங்கள் ஞானத்தின் கைகளில் இருக்கிறது'...!





## கவித்துவம்

முதன்மையாக இதைத்
தெரிந்துகொள்.
நீ வாழ்க்கை முழுவதும்
தேடிக் கொண்டிருக்கும்
காதலுக்குரிய மனிதன்
வேறு யாருமில்லை.
அது நீதான்!
இந்த உண்மையைக்
கெட்டியாகப் பிடித்துக்கொள்.
வேறு எதைப்பற்றியும் கவலையோ,
பயமோ கொள்ளாதே!"

- ரூமி





# பணம் மிச்சப்படுத்தும் ஷாப்பிங்

எல்லோருடைய வீடுகளிலும் ஸ்டோர் ரூம் அல்லது பரண் நிரம்பி பிதுங்கி வழிவது வழக்கம். அங்கே இருக்கும் பொருட்களை வருடம் ஒரு முறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எடுக்கவேண்டிய சூழல் உருவாகலாம். அதற்காக அத்தனை பொருட்களை அடக்கி வைத்திருப்பார்கள். அப்படி தேடும் பொருள் பெரும்பாலும் கிடைக்காது. எனவே, கொஞ்சநேரம் தேடிவிட்டு அந்த பொருள் இல்லாமலே சமாளித்து விடுவார்கள். அதேநேரம், தேவையில்லாத பொருட்களை வெளியே தூக்கி எறியவும் மனம் வராது.

நிறைய பேர் இப்படி தேவையில்லாத பொருட்களை வாங்கிக் குவிக்கிறார்கள். எப்போதாவது தேவைப்படும் என்ற எண்ணத்தில் பார்க்கும் இடத்தில், கிடைக்கும் நேரத்தில் வாங்கிக் குவிப்பார்கள், இப்படி தேவை இல்லாத பொருட்களை எல்லாம் வாங்குவதை தூண்டில் செலவுகள் எனப்படும் Impulsive Purchase என்று கூறுவார்கள். பொதுவாக வீட்டுக்கு வாங்கும் எல்லாமே அத்தியாவசியச் செலவு என்பதாகத் தோன்றும். ஆனால், அது உண்மை இல்லை. எனவே, ஒவ்வொரு பொருள் வாங்கும்போதும் சில விதிமுறைகளை கடைப்பிடித்தால் போதும், தேவையற்ற பொருட்கள் வாங்குவதை நிறுத்திவிடலாம்.



www.gyaanaguru.com

www.gyaanaguru.com

## பார்த்தவுடன் வாங்காதீங்க.

பொருட்காட்சி, மார்க்கெட் போன்ற இடங்களுக்குச் செல்கையில் முதல் கடையில் பார்த்த பொருள் மனதை இழுக்கலாம். உடனே அதை வாங்க வேண்டும் என்று துடிக்காதீர்கள். ஒட்டுமொத்தமாக சுற்றிப் பாருங்கள். மற்ற கடைகளில் அதைவிட தரமான பொருள், அதை விட வித்தியாசமான பொருள் கிடைக்கலாம். ஒரு சில நேரத்தில் அந்த பொருள் வீண் என்பதும் தெரியவரலாம். எனவே, பார்த்தவுடன் ஒரு பொருள் வாங்கும் எண்ணத்தைக் கை விட்டாலே தேவையில்லாத பொருட்கள் வாங்கிக் குவிப்பதைத் தவிர்க்கலாம். பணமும் பாதுகாக்கப்படும்.

## பணமா... பொருளா..?

தேவைப்பட்டாலும் படலாம் என்று வாங்கப்படும் பொருளுக்குரிய பணத்தை தனியே சேமித்து வைத்தால் நல்லதா அல்லது அந்த பொருளை வாங்குவது நல்லதா என்று பார்க்க வேண்டும். உதாரணத்துக்கு பெண் மாசமாக இருக்கும் நேரத்தில் பிள்ளைக்குத் தொட்டில் வாங்கி வைப்பது அவசியம் இல்லை. அதற்கு என பணத்தை தனியே முதலீடு செய்து வைத்தால், தேவைப்படும் நேரம் இப்போது வாங்குவதைவிட சிறந்த பொருளை குறைந்த விலைக்கு வாங்க முடியலாம். ஒரு வேளை இந்த பொருள் இனி கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்ற சூழலில் மட்டும் உடனே வாங்கிப் போடலாம். நிச்சயம் தேவைப்படும் என்றால் மட்டுமே தூளி வாங்க வேண்டும். ஏனெறால் பெரும்பாலும் அம்மாக்கள் குழந்தையை தன் அருகில் போட்டு படுத்துக் கொள்ளவே விரும்புவார்கள். ஆசைக்கு வாங்கிப் போட்ட தூளி வீணாகவே போய்விடலாம்.




## பசி, கோபத்தில் போகாதீங்க

வயிற்றில் பசி அல்லது மனதில் கோபம் இருக்கையில் ஷாப்பிங் போவதில்லை என்ற முடிவை எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் பசியைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கண்ணில் தென்படுவதை எல்லாம் வாங்கிப் போடுவார்கள். அதேபோல் கோபத்தில் இருக்கையில் விலை பார்க்கத் தோன்று வதில்லை. இந்த காலகட்டத்திலே தேவையில்லாத பொருட்கள் வாங்கிக் குவிப்பதாக சொல்லப்படுகிறது. இதனை தடுத்து நிறுத்தினாலே வீண் செலவைக் குறைத்து விடலாம். அதேபோல் என்ன பொருட்கள் வாங்க வேண்டும் என்ற பட்டியல் எழுதிக் கொண்டே போக வேண்டும். அவற்றில் இல்லாத பொருட்கள் மீது கவனம் செலுத்தாதீர் கள். அப்படி ஒரு பொருளும் வாங்காமல் திரும்பிவிட்டால் உங்களுக்கு நீங்களே ஒரு சபாஷ் சொல்லிக்கொள்ளுங்கள்.

## ஒரு மாதம் கெடு;

ஏதேனும் ஒரு விலை உயர்ந்த அதேநேரம் எப்போதாவது மட்டுமே பயன்படும் பொருள் வாங்கவேண்டும் என்ற சூழல் ஏற்படுகிறது என்றால், அந்த பொருள் வாங்கும் எண்ணத்தை, ஒரு மாதம் தள்ளிப் போடுங்கள். அந்த ஒரு மாதத்தில், அந்தப் பொருள் நிஜமாக எத்தனை முறை தேவைப்பட்டது என்பதைக் குறித்து வையுங்கள். ஒரு மாதம் கழிந்த பின்னரும், அந்தப் பொருள் உங்களுக்குத் தேவை என்பது உறுதியாகத் தெரிந்தால் மட்டும் வாங்கலாம். இல்லையெனில் அந்த பொருள் இல்லாமலே காலம் தள்ளலாம்.

## மூன்று மாதம் கெடு ;

புதிய டிவி மாற்றுவது, புதிய சோபா மாற்றுவது போன்ற சூழல் உருவானால் மூன்று மாதங்கள் கெடு விதித்துக் கொள்ளுங்கள். மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும் குறிப்பிட்ட புதிய பொருள் வாங்க வேண்டும் என்று விரும்பினால் உடனடி யாக வாங்குங்கள். பொதுவாக இந்த காலகட்டத்தில் சில பொருட்கள் தேவையே இல்லை என்பது புரிந்துவிடும். அவசியம், கட்டாயம் தேவைப்படும் என்றால் மட்டும் வாங்குங்கள்.

> **மந்திரச்சொல்**
>
> தற்பெருமையின் உச்சகட்டமே ஆணவமாக மாறுகிறது.



## விண்டோ ஷாப்பிங்

பொழுதுபோக வேண்டும் என்பதற்காக மால் அல்லது பெரிய சூப்பர் மார்க்கெட்டிற்குச் சென்று பொழுதுபோக்குவதற்கு நிறைய பேர் செல்வதுண்டு. அங்கே போகும் நேரத்தில் எதுவும் வாங்கக்கூடாது என்ற எண்ணத்தில் செல்வார்கள். ஆனால், அங்கே தள்ளுபடி, புதிய வரவு போன்றவைகளைப் பார்க்கும்போது தூண்டில் போடுவது போன்று இழுத்துவிடும். தேவைப்படாததையும் வாங்கிக் குவிக்கும் சிக்கல் இங்குதான் அதிகம் உருவாகிறது.

## தள்ளுபடி என்பது உண்மை இல்லை

ஒரு சில கடைகளில் தள்ளுபடி என்று போட்டு கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்வார்கள். செய்கூலி, சேதாரம் இல்லை என்றெல்லாம் சொல்லி தூண்டில் வீசுவார்கள். பொதுவாக நீண்ட காலம் விற்பனையாகாமல் கிடக்கும் பொருட்களுக்கு அதிக கழிவு கொடுப்பார்கள். இப்படிப்பட்ட கடைகளுக்கு மறந்தும் எட்டிப்பார்க்காதீர்கள். ஏனென்றால் 2 ஆயிரம் ரூபாய் விலையுள்ள சுடிதார் 600 ரூபாய் என்று போட்டிருப்பார்கள். அதை உண்மை என்று வாங்குவீர்கள். வேறு ஒரு கடையில் அதே பொருளை 550 ரூபாய்க்கு வாங்க முடியலாம். எனவே ஆடித் தள்ளுபடி, ஆண்டு தள்ளுபடி, ஸ்டாக் கிளியரன்ஸ் போன்ற தள்ளுபடி விற்பனை நாட்களில் காது கேளாதவர் போன்றே இருந்து கொள்ளுங்கள்.

## தேடுவதற்குச் செல்லுங்கள்

ஏதேனும் ஒரு பொருள் வாக்குவதற்கு அமேசான், ஃப்ளிப்கார்ட் போன்ற இணையதளங்களுக்குச் செல்வது தவறு இல்லை. ஆனால் நிறைய பேர் அந்த தளங்களுக்குச் சென்று எந்த பொருள் புதிதாக வந்திருக்கிறது, எது விலை குறைவாக இருக்கிறது என்றெல்லாம் தேடுகிறார்கள். இதனாலே தேவை இல்லாத பொருட்களை எல்லாம் வாங்கும் சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள். எனவே, தேவை என்றால் மட்டுமே இந்த தளங்களுக்குச் செல்லலாம், மற்ற நேரங்களில் கண்ணில் பட்டாலும் கண்டுகொள்ளாமல் நகருங்கள்.

## இன் அண்ட் அவுட்

ஆங்கிலத்தில் one in, one out, என்று ஒரு விதி உண்டு. இதன் அர்த்தம் ஒரு பொருள் உள்ளே வந்தால், ஒரு பொருள் வெளியே போக வேண்டும். அதாவது ஒரு பொருள் வாங்க ஆசைப்பட்டால், அதற்கு இணையாக ஒரு பொருளை வெளியே கழிக்க வேண்டியது முக்கியம். இப்படி ஒரு சூழல் வரும்போது புதிய பொருள் தேவையா என்ற கேள்வி பலமாக வரும். அதாவது வீட்டில் இருக்கும் மிக்ஸியை வெளியே போட்டுவிட்டே புது மிக்ஸி வாங்க வேண்டும். இப்படி செய்தால் கடைசி வரையிலும் பொருளை பயன் படுத்தும் எண்ணம் வந்துவிடும். தேவை இல்லாமல் பொருள் வாங்கும் ஆசை குறைந்துவிடும்.


## முதலீட்டு விதி;

ஒரு பொருளை வாங்குவதற்கு பதிலாக, அந்தப் பணத்தை முதலீடு செய்தால் எவ்வளவு பயன் கிடைக்கும் என்று கணக்கு போட்டுப் பார்க்க வேண்டும். அதாவது பிராண்டிங் சட்டை 3 ஆயிரம் ரூபாய்க்கு வாங்குவதாக வைத்துக்கொள்வோம். அந்த சட்டையை மாதத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் போடுவீர்கள். அதற்குப் பதிலாக அந்த பணத்தை வங்கியில் போட்டு வைத்தால் ஓர் ஆண்டுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்று கணக்கிட்டுப் பார்க்கலாம். இந்த வட்டி தொகையை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் என்று கணக்கு போடாமல் ஐந்து ஆண்டு என்று கணக்கு பார்த்தால், அந்த பணத்தின் மதிப்பு தெரியவரலாம். இதன் மூலம் செலவைக் குறைக்க முடியும்.

## பின்விளைவுகள்

ஒரு கார் இருக்கும் போது இன்னொரு கார் வாங்குவது ஆசையாக இருக்கலாம். ஆனால், அதனால் எழும் பின்விளைவுகளை எண்ணிப் பார்த்தால் அது வாங்குவது அவசியமா என்று தோன்றும். ஏனென்றால் புதிதாக ஒரு கார் வாங்கினால் அதை நிறுத்த இடம் தேவைப்படும். தினமும் துடைப்பதற்கு செலவாகும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சர்வீஸ் செய்து செலவு செய்ய வேண்டியிருக்கும். புது டிரைவர் தேவைப்படும். இப்படியெல்லாம் பின்விளைவு களை யோசித்தால் இரண்டாவது கார் வாங்குவது அவசியம் இல்லை என்றே தோன்றிவிடும். இத்தனை விதிகளையும் ஒரு விளையாட்டு போன்று செய்து பாருங்கள். அவசியமற்ற பொருட்களை வாங்காமல் தவிர்த்துவிட முடியும்.

# பெண்கள் ஏன் துறவி ஆவதில்லை..



மகாபாரதத்தில் திருதராஷ்டிரன் சரியான வயதில் வானப்பிரஸ்தம் மேற்கொண்டிருந்தால், குருஷேத்திரப் போர் நடந்திருக்காது என்பார்கள். அண்ணன் தம்பிகளாக ஆளுக்கு கொஞ்சம் நிலத்தை பிரித்துக்கொண்டு தர்மனும் துரியோதனனும் நிம்மதியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால் பதவி சுகம், பாச சுமையினால் வாழ்நாள் முழுவதும் அரசனாக வாழவேண்டும் என்று ஆசைப்பட்டான் திருதராஷ்டிரன். காலம் முழுவதும் அரசனாக வாழமுடியும் என்று நம்பினான். அதனாலே பெற்ற அத்தனை பிள்ளைகள் கொல்லப்படுவதையும் கண்முன்னே பார்க்கும் துரதிர்ஷ்டத்திற்கு ஆளானான். அதனால் போதும் என்ற மனநிலை தோன்றியதும் வாழ்க்கையில் இருந்து விலகுவதே துறவு நிலை.

**? போதும் என்ற மனநிறைவு எளிதில் கிடைப்பதில்லையே, என்ன செய்யவேண்டும்?**

போதும் என்ற மனநிறைவு எப்போதும் கிடைக்காது. உருவாக்கவே வேண்டும். எத்தனை பணம் சேர்த்தாலும் எதிர்காலத்துக்குப் போதாது என்ற உண்மையை ஒவ்வொரு நபரும் உணரவேண்டும். ஆயிரம் கோடி சேர்த்துவைத்தாலும், அது காணாமல் போவதற்கு ஒரு நொடி போதும். அதனால் சேமிப்பை பற்றி கவலைப்படுவதில் அர்த்தம் இல்லை. சிறப்பாக வாழ்ந்துவிட்டோம் என்ற எண்ணம் தோன்றினால், உடனே வழக்கமான வாழ்க்கை பாதையில் இருந்து வெளியேற வேண்டும்.

**? வாழ்க்கை சக்கரத்தில் இருந்து வெளியேறி என்ன செய்யவேண்டும்?**

எதுவும் செய்யவேண்டாம். வேடிக்கை பார்த்தால்

www.gyaanaguru.com
www.gyaanaguru.com


போதும். எப்போதும் போல் இயங்க வேண்டும் அதேநேரம், உலகத்தோடு ஒட்டிக்கொண்டு இருக்க அவசியம் இல்லை. நீங்கள் இல்லையென்றால் வீடு அல்லது அலுவலகம் ஸ்தம்பித்துவிடும் என்ற குருட்டு நம்பிக்கையை தூக்கிப்போடுங்கள். உன்னுடைய ஆலோசனை, அறிவுரை, வழிகாட்டுதல் இல்லாமலே உன்னுடைய இல்லம் சிறப்பாக நடக்கும் என்பதை கண் முன்னே வேடிக்கை பாருங்கள். அப்போது வாழ்க்கை புதிதாக தெரியும். புதிர்களுக்கு விடை கிடைக்கும்.

### ? சாமியாரைப் போன்று காவி உடுத்தி சந்நியாசியாக வேண்டாமா?

துறவி, சாமியார், சந்நியாசி என்று வேடம் போடத்தேவையில்லை. வீட்டிலேயே துறவியாக வாழலாம். வாய்க்கு ருசியாக சாப்பிடுவதை முதலில் நிறுத்துங்கள். சாப்பாட்டில் குறை இருந்தாலும், குற்றம் சொல்லாமல் சாப்பிடப் பழகுங்கள். உணவு சாப்பிடும் அளவை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொண்டே வாருங்கள்.

கண் முன்னே பிள்ளைகள் தவறு செய்வது தெரிந்தாலும் சட்டை செய்யாமல் அமைதியாக இருங்கள். தவறுகள் மூலம் அவர்கள் நல்ல பாடம் படித்துக்கொள்வார்கள். அந்த அனுபவத்தைவிட நல்ல ஆசான் வேறு எதுவும் இல்லை. நாளை என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று பட்டியல் போடாமல், இன்று இரவே செத்துப்போகலாம் என்ற நினைப்பில் தூங்குங்கள். நேரமாகிவிட்டது என்று பதறிப்போய் எழ வேண்டிய அவசியம் இல்லை. யாருக்கும் இடைஞ்சலாக இல்லாமல், யாரையும் சார்ந்து இராமல், பேச்சைக் குறைத்து வாழப்பழகுபவர் வீட்டுக்குள்ளே துறவியாகி இருக்க முடியும்.

### ? பெண்களும் துறவறம் மேற்கொள்ள வேண்டுமா?



> “ **மந்திரச்சொல்**
>
> கவலைப்பட நேரம்
> இல்லாதவர்களை
> துன்பம் நெருங்கு
> வதில்லை. ”

திருமணம் முடிந்துவிட்டாலே, பெண் கிட்டத்தட்ட துறவியாகிவிடுகிறாள். தன்னைவிட கணவனுக்கு என்ன தேவை என்றுதான் பார்க்கிறார்கள். குழந்தை பெற்றதும் முழு துறவியாகிறாள். பிள்ளைக்காக வாழ்கிறாள். அவள் கடவுளிடம் கூட, தனக்காக எதையும் கேட்பதும் பெறுவதும் இல்லை. அதனால்தான் கடைசி காலத்தில் கிடைத்ததை குடித்துக்கொண்டு பெண்களால் நிம்மதியாக வாழக்கையைத் தள்ளமுடிகிறது. மனைவி இல்லாத கணவன் சீக்கிரம் மரணம் அடைவதற்கும், கணவன் இல்லாத மனைவி நீண்ட நாட்கள் வாழ்வதற்கும் அடிப்படை காரணம், பெண்ணின் துறவு மனப்பான்மைதான்.

### ? எந்த வயதில் மனதளவில் துறவு மேற்கொள்வது நல்லது?

ஐம்பதில் தயாராக வேண்டும். அறுபதுக்குப் பிறகு துறவியாக வாழத் தொடங்க வேண்டும். இந்த வயதில் உலகை வேடிக்கை பார்க்கும் குணம் வரவில்லை என்றால், அதிக துன்பத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும்.







# ஞானகுரு பதில்கள்

**? ஏதாவது ஒரு கவலை என்னை துன்புறுத்திக்கொண்டே இருக்கிறது. கவலையிலிருந்து விடுபடுவதற்கு ஏதேனும் வழிகள் இருக்கிறதா..?**

**– பி.ஷியாமளா, கோவை.**

**ஞானகுரு :**

பாதை இல்லாத ஊர் என்று எதுவுமில்லை. நோய், எதிரி, தோல்வி, பயம், அச்சம், நிச்சயமற்ற நிலை, அவமதிப்பு, பலவீனம் போன்ற எத்தனையோ காரணங்களால் கவலை உருவாகலாம். கவலை இல்லாத மனிதர்கள் இந்த உலகில் யாருமே இல்லை.. கவலையை எப்படி எடுத்துக்கொள்கிறாகள் என்பதிலே வித்தியாசம் இருக்கிறது. கவலையைப் போக்குவதற்கு உங்களுக்கு ஐந்து வழிகள் உள்ளன.

- எதுவெல்லாம் தவிர்க்க முடியாததோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். விபத்து நடந்துவிட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள். எச்சரிக்கையாக இருந்திருக்கலாம், பிறர் சொன்னதைக் கேட்டிருக்கலாம் என்றெல்லாம் கவலைப்படுவதால், நடந்த விபத்து மாறிவிடப் போவதில்லை. விபத்திலிருந்து எப்படி மீள்வது என்பதைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டுமெ தவிர, விபத்து பற்றி அல்ல.

- இழுத்துப் போட்டுக்கொண்டு வேலை செய்யுங்கள். செய்வதற்கு நிறைய வேலைகள் இருப்பவருக்கு கவலைப்படுவதற்கு நேரம் இருப்பதில்லை. எனவே, எதையாவது செய்துகொண்டே இருங்கள். கவலைக்கு நேரம் இருக்காது.

- யாரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள். அன்பு, பாராட்டு, நன்றி போன்றவைகளை பிறரிடம் எதிர்பார்த்து ஏமாந்துபோகாதீர்கள். நீங்கள் அன்பு செலுத்துங்கள், பிறரை பாராட்டுங்கள். எதற்கும் பிரதிபலன் பாராமல் இருந்தால் கவலை தோன்றாது.

- எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற அச்சமே நிறைய பேரை பாடாய் படுத்துகிறது. இன்றைய தினத்தில் வாழுங்கள். நாளை நல்லதாகவே நடக்கும் என்பதை உறுதியாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே கவலையை போக்கடிக்கும்.

- பிறருக்கு உதவி செய்வதற்கு, பிறர் நன்மைக்கு ஏதேனும் செய்யுங்கள். பிறருக்காக வேலை செய்பவருக்கு ஒரு போதும் கவலை எட்டிப் பார்ப்பதில்லை.





**? இந்த மாதத்துடன் வேலையில் இருந்து ரிடயர் ஆகிறேன். முதுமையை எப்படி எதிர்கொள்வது என்று வழி காட்டுங்கள்..?**


**– என்.ராகேஷ், வாணியம்பாடி.**

**ஞானகுரு :**

ஒவ்வொரு நாளும் மனிதன் மரணத்தை நோக்கி நகர்ந்துகொண்டே இருக்கிறான். குழந்தைப் பருவம், இளம் பருவம், முதுமை என எந்தவொரு காலகட்டத்திலும், எந்த ரூபத்திலும் மரணம் வரலாம். எனவே, முதுமையில் மட்டுமே மரணம் வருவதாகக் கருதுவது உண்மையில்லை. முதுமை என்பதும் ஒரு பருவம். இந்த வயது வரையிலும் வாழ்ந்திருப்பதே ஒரு சாதனை என்பதை புரிந்துகொள்ளுங்கள். இதே மகிழ்ச்சியுடன் முதுமையை அனுபவியுங்கள். முதுமையை அனுபவிக்க 10 தகுதிகள் வேண்டும் 1. நோயில்லாத உடல் 2. போதிய அளவு பணம் 3. பிரியாத உறவு 4. நல்ல நினைவாற்றல் 5. நட்பு வட்டம் 6. படுத்தவுடன் தூக்கம் 7. ஆசைகள் இல்லாத மனம். 8. மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை. 9. பிறரிடம் குற்றம் காணாத மனநிலை. 10. எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் மனநிலை. இவற்றில் எதுவெல்லாம் இல்லையோ, அதனை எல்லாம் வளர்த்துக்கொள்ளுங்கள். முதுமையும் இனிமையாகவே கழியும்.







**? டீரென பூமி சுற்றுவது நின்றுவிட்டால் என்னாகும்..?**

**– பி.ஜான்சன், மன்னார்குடி.**

**ஞானகுரு :**

பூமி சுற்றுவதற்கு மனிதன் காரணம் இல்லை என்பது போலவே, பூமி நின்று போவதற்கும் மனிதன் காரணமாக இருக்க முடியாது. எனவே இப்படிப்பட்ட கற்பனைகள் தேவையில்லை. அதேநேரம், திடீரென பூமி சுற்றுவது நின்றுவிட்டால் என்னாகும் என்பதற்கு அறிவியல் கூறும் விடை சுவாரஸ்யமானது. பூமி சுழல்வது நின்றுவிட்டால் பூமியில் இருக்கும் அத்தனை பொருட்களும் அதாவது கட்டடங்கள், வாகனங்கள் என எல்லாமே பறக்கத் தொடங்கும். கடல் தண்ணீர் துருவங்களை நோக்கிப் பாயும். சூரியக் கதிர்வீச்சு நேரடியாகப் பாதிக்கும் என்பதால் எல்லா உயிர்களும் இறந்து போகும். அத்தனை தொழில்நுட்ப சாதனங்களும் செயல் இழந்து போகும். பகல், இரவு என்று வருவது நின்றுவிடும். எப்போதும் பகலாக அல்லது எப்போதும் இருளாக இருக்கும். ஆனால், இவற்றை எல்லாம் பார்க்கத்தான் நாம் இருக்க மாட்டோம்.

**? ஒரு சில கோயில்களுக்குச் சென்றால் மட்டும் மனம் நிம்மதியாகிறதே, அந்த கோயில் சக்தி நிரம்பியது என்பதாலா..?**

**– ஏ.அமராவதி, திருத்துறைப்பூண்டி**

**ஞானகுரு :**

குறிப்பிட்ட கோயிலுக்குச் சென்றால் மனம் நிம்மதியாகிவிடும் என்ற எண்ணமே நிம்மதி தருகிறதே தவிர, அந்த கோயில் அல்ல. அதனால் தான் ஒவ்வொரு நபருக்கும் ஒரு கோயில் விருப்பமானதாக இருக்கிறது. எல்லா மனிதருக்கும் நிம்மதி தரும் கோயில் என்ற ஒன்று இந்த உலகில் இருந்தால், அந்த கோயிலைத் தவிர வேறு மருத்துவமனைகளே தேவையில்லாமல் போய்விடும். அதேபோல் கோயிலுக்கு சக்தி இருக்கிறது என்பதை மக்களும் அரச்சகர்களும் நம்புவதில்லை. அதனால்தான், குறிப்பிட்ட காலத்தில் கும்பாபிஷேகம் செய்யவில்லை என்றால் அந்தக் கோயிலுக்குச் சக்தி குறைந்துவிடும் என்று சொல்கிறார்கள்.






**? மனைவிக்கு நல்ல புடவை தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறேன். ஆனால், அவர் மட்டமான ஒன்றையே தேர்வு செய்கிறார். நல்ல ரசனையை வளர்ப்பது எப்படி..?**

**– சி.மனோகரன், நெய்வேலி.**

**ஞானகுரு ;**

ரசனை என்பது தனி மனிதரின் விருப்பம். அதில் குறை காண்பது கொடூரமான அடிமைத்தனம். நீங்கள் தேர்வு செய்வதே சரியானது என்பதை எப்படி அறிவீர்கள். ஏனென்றால் நீங்கள் தேர்வு செய்யும் புடவையை எத்தனையோ நபர்கள் வேண்டாம் என்று புறம் தள்ளியிருப்பார்கள். அந்த புடவையை மலிவானதாக நினைத்திருப்பார்கள். எனவே, அவருக்குப் பிடித்ததை அவர் வாங்கட்டும். உங்கள் ஆணாதிக்கத்தை ரசனை என்று முத்திரை குத்தி அவமானப்படுத்தாதீர்கள்.




?அடி மேல் அடி என்பார்களே, அப்படித்தான் என் வாழ்க்கையில் மட்டும் நடக்கிறது. எல்லோரும் நன்றாக இருக்கையில் எனக்கு மட்டும் இத்தகைய துன்பம்..?

– என்.ஜி.மணிகண்டன், சென்னை.

**ஞானகுரு ;**

ஒரே நேரத்தில் பிறக்கும் பணக்கார வீட்டுக் குழந்தைக்கும் எழை வீட்டுக் குழந்தைக்கும் வாழ்க்கை ஒன்று போல் இருப்பதில்லை. இதற்கு காரணங்கள் இல்லை. சில சூழல்கள் மோசமாக அமையலாம். எதிர்பாராமல் நோய் வரலாம். நிலச்சரிவில் புதைந்து வீடு காணாமல் போகலாம். பொதுவாக வாழ்க்கைப் பயணத்தில் பிறரது வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்பதே பெரும் துன்பம் தருகிறது. பணக்கார நண்பன் கார் வாங்கியதைக் கண்டு பொறாமைப்படுவதை விட, ஏழை நண்பன் இன்னமும் சைக்கிளில் போவதைக் கண்டு திருப்தி அடைவதே சரியான பார்வை. சில சிக்கல்களை பாடங்களாகவும் சில பிரச்னைகளை பயிற்சிகளாகவும் காண்பதற்குப் பழக வேண்டும். அதாவது பாறையை உடைத்து உடைத்தே சிற்பம் செய்ய முடியும். வைரம் பட்டை தீட்டப்பட வேண்டும் பல அழுத்தங்களை தாங்கித்தான் ஆகவேண்டும். எனவே, ஒரு மிகப்பெரும் பரிசு காத்திருக்கிறது என்ற எண்ணத்தில் சோதனைகளையும், சவால்களையும் ஏற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்லுங்கள். நடந்தே தீர வேண்டும் வழி என்பதை மறக்க வேண்டாம்.

?சரியான செயல் செய்தாலும் தவறாகவே முடிகிறது. இதற்கு என்ன காரணம்...?

– சி.மனோஜ், கடலூர்.

**ஞானகுரு :**

விரலில் பிரச்னை இருப்பதை அறியாதவர், உடலின் எந்த பாகத்தைத் தொட்டாலும் வலிப்பது போலவே உணர்வார். எனவே, பிரச்னையின் மூலாதாரம் எதுவென தெளிவாகக் கண்டறியுங்கள். சேமிப்பு நல்ல செயல். ஆனால், அதை தெளிவாகவும் சரியாகவும் செய்யவில்லை என்றால் சிக்கலாகிவிடும். இதற்கு உதாரணம் எறும்புகள். எதிர்காலத்துக்கு எறும்புகள் தானியங்களை சேமிக்கின்றன. மண்ணில் போடும் எந்த ஒரு தானியமும் முளைத்து செடியாக மாறிவிடும். ஆனால், எறும்புகள் சேமிப்பு தானியமாக மாறுவதில்லை. ஏன் தெரியுமா..? எறும்புகள் தாங்கள் சேமிக்கும் தானியங்களின் முனையை உடைத்துவிடுகின்றன. அதனாலே அந்த தானியங்கள் முளைப்பதில்லை. எனவே, சரியான விடை தேடுங்கள். நிச்சயம் கண்டுபிடிப்பீர்கள்.

?கௌரவத்திற்காக வாழ்வதால்தானே வாழ்வில் தோல்வி கிடைக்கிறது.?

– எஸ்.அழகேஸ்வரி, கருப்பசாமி நகர்.

**ஞானகுரு ;**

கௌரவம், மானம், அவமானம் போன்ற எல்லாமே வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை. இதை எல்லா மனிதர்களும் மிகவும் தாமதமாகவே புரிந்துகொள்கிறார்கள். அப்படி புரிந்துகொள்ளும் நேரத்தில் வாழ்க்கை மிச்சமிருப்பதில்லை. மயிர் நீப்பின் உயிர் வாழா கவரிமான் என்று சொல்வதெல்லாம் மனிதர்கள் வாழ்க்கைக்குத் தேவை இல்லை. வெட்கம், மானம், சூடு, சுரணை போன்றவைகளுக்காக வாழ்க்கையை இழந்தவர்களே அதிகம். மானத்துக்காக கொலை செய்தவர்கள் வாழ்நாள் முழுக்க வருந்திக்கொண்டே இருக்க வேண்டும்.

?முடிவெடுக்க முடியாதபோது என்ன செய்ய வேண்டும்..?

– பி.ராஜலட்சுமி, என்.ஜி.ஓ.காலனி

**ஞானகுரு :**

பொறுமையாக இருங்கள். முடிவு தன்னைத்தானே தேடிக்கொள்ளும்.

?வாழ்வில் விரைந்து உயர என்ன செய்யலாம்..?

– எஸ்.கோமதி, ஆமத்தூர்.

**ஞானகுரு :**

குறுக்கு வழிகள் நேர் வழிகளைவிட எப்போதுமே ஆபத்தானவை. எனவே, பயிற்சியும் முயற்சியும் தவிர வேறு வழிகள் எதுவுமில்லை.





# ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.











செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639










க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.

# உங்கள் கஷ்டத்தை யாரும் மதிக்கப்போவதில்லை..!




## சினிமா எனும் வாழ்க்கை

## காஸ்ட் அவே

தனக்கென வாழாமல் தன்னுடைய வாழ்நாளில் பெரும்பாலான காலத்தை குடும்பத்தினருக்காக வாழ்கிறான் ஆண். அதேபோல் பெண்ணும் தனக்கென வாழாமல் தங்கள் பிள்ளை, தன் கணவன், தன் குடும்பம் என்றே வாழ்கிறாள்.

குடும்பத்துக்காக அல்லது மற்றவர்களுக்காக இத்தனை தூரம் சிரமப்படவும் துன்பம் அடையவும் வேண்டுமா..?

தேவையில்லை என்பதே உண்மை. உயிரைக் கொடுத்து பாடுபடத் தேவையில்லை. எத்தனை கஷ்டப்பட்டு உழைத்தாலும், ஒரு நாள் எல்லாமே மறக்கப்பட்டுவிடும். இன்றைய நாளில் என்ன தருகிறீர்கள் என்பதே பார்க்கப்படும். கடந்த காலத்தை யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை. எனவே, வாழும் காலத்தில் முதலில் தங்கள் நன்மைக்காக, தங்கள் மகிழ்ச்சிக்காக வாழ்வதற்குப் பழகுங்கள்.

காதல், குடும்பம் என்பதெல்லாம் அழகான கண்ணாடி மாளிகை போன்றது. ஏதேனும் ஒரு விருப்பத்தை நிறைவேற்றா விட்டால் அந்த குடும்பம் உடைந்து போகலாம். நீண்ட நாட்கள் சந்திக்கா விட்டால் காதல் அழிந்து போகலாம். இதுவே உண்மையான வாழ்க்கை என்பதை கண் முன் நிறுத்தும் படம் காஸ்ட் அவே.

டாம் ஹாங்ஸ் செல்லும் விமானம் கடலில்விழுந்துவிபத்துக்குள்ளாகிறது.


www.gyaanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
4 - 6

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**


நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com




# காஸ்ட் அவே

அவருடன் பயணித்த அனைவரும் விபத்தில் இறந்து போகிறார்கள். டாம் ஹாங்கஸ் மட்டும் உயிர் பிழைத்து மனித நடமாட்டம் எதுவுமே இல்லாத ஒரு தொலைதூர தீவில் கரை ஒதுங்குகிறார்.

ஹைடெக் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த மனிதனுக்கு தீவு என்பது நரகம். உணவு, வீடு, ஆடை, மனைவி, மக்கள் என்று எல்லாமே போய்விட்ட நொடியில் செத்துவிடலாமா அல்லது வாழ்வதா எனும் போராட்டம் தொடங்குகிறது.

தனக்காக மனைவி, பிள்ளைகள் நண்பர்கள் காத்திருப்பார்கள். தன்னை அவர்கள் தேடிக் கொண்டிருப் பார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு உத்வேகம் அளிக்கிறது. உயிர் வாழ வேண்டுமென்ற உள்ளுணர்வு ஏற்படுகிறது. அதேநேரம் கண் முன் தெரியும் நிஜம் பயமுறுத்துகிறது. மனித நடமாட்டம் அற்ற தீவில் உயிர் பிழைத்து வாழ்வதற்கு போராடத் தொடங்குகிறார். மரங்களில் ஏற பழங்களை சாப்பிடுகிறார். கடல் மீன்களை பிடித்து பசியைப் போக்குகிறார்.

அவ்வப்போது தன் பர்ஸிஸ் இருந்த மனைவி, பிள்ளை குட்டிகளின் படத்தை எடுத்து நம்பிக்கை வளர்த்துக் கொள்கிறார். ஒரு கைப்பந்தில் ஒரு முகத்தை வரைந்து அதற்கு "வில்ஷன்" என்று பெயரிட்டு அதனை தனது நண்பனாக கற்பனை செய்து பேசி மகிழ்கிறார். அங்கே மலை உச்சியில் ஏறி ஒரு கொடியை நட்டுவைத்து அடையாளம் உருவாக்குகிறார். நெருப்பை மூட்டிப் பார்க்கிறார். வருகின்ற, போகின்ற கப்பல்கள் அவரை அடையாளம் கண்டு, அவரை காக்க வரும் என்று நம்புகிறார். நாட்கள் உருண்டோடுகின்றன. இப்படியே அங்கே சில வருடங்களைக் கழிக்கிறார். ஆனாலும் நம்பிக்கை இழக்கவில்லை.

> “ **மந்திரச்சொல்**
>
> நிறைய பேருக்கு தவறு செய்யும் சந்தர்ப்பத்தை அதிகாரமே தருகிறது. ”

அன்பு மனைவி, பாசமான பிள்ளைகள் உயிர் நண்பர்கள் மறு பக்கத்தில் தனக்காக இருப்பார்கள் என்ற நம்பிக்கை அவரை உற்சாகப் படுத்துகிறது. இந்த நம்பிக்கை அவரை உயிர் வாழ ஊக்குவிக்கிறது. கடைசியாக பல நாட்கள் கஷ்டபட்டு மரக்கட்டைகளால் ஒரு படகு செய்கிறார். அதில் ஏறி நம்பிக்கையோடு கடலில் குதிக்கிறார். கடல் அலைகள் தரும் மரண பயத்தை மீறிப் பயணிக்கிறார். ஒருவழி யாக வாழ்க்கை மாறுகிறது. அதிர்ஷ்டவசமாக ஒரு கப்பல் அவரை இனங்கண்டு பாதுகாத்து மீட்கிறது.

இத்தனை ஆண்டுகள் கஷ்டப்பட்டு வாழ்ந்த காலத்தை எல்லாம் மறந்துவிட்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தான் வாழ்ந்த உலகம் நோக்கிச் செல்கிறார். ஆனால் அங்கே அவருக்கு ஏமாற்றம் காத்திருந்தது. அவரது அன்பு மனைவி வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டுபுதுவாழ்க்கைவாழ்ந்துகொண்டு இருக்கிறார். அவரது பிள்ளைளும், நண்பர்களும் அவர் இறந்ததாக நினைத்து சில நாட்கள் துக்கம் அனுஷ்டித்துவிட்டு, அப்படி ஒருவர் இருந்ததை மறந்துவிட்டார்கள். அங்கு யாரும் அவரை தேடவில்லை, நினைக்கவில்லை என்ற உண்மை அவர் இதுவரை பட்ட வேதனைகளை விட அதிகமாக இருக்கிறது. ஒரு மனிதன் காணாமல் போனதை எண்ணி வருத்தப்படாமல் உலகம் ஓடிக்கொண்டிருப்தைக் காண்கிறார்.

இதுவே கேஸ்ட் அவே சொல்லித்தரும் பாடம். இதை ஒவ்வொரு நபரும் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. பிறருக்காக ஆண்டுக்கணக்கில் கஷ்டங்கள், இன்னல்கள் அனுபவிக்க அவசியம் இல்லை. உலகை விட்டும் மறைந்த பிறகு உங்கள் முயற்சிகள், சாதனைகள், திறமைகளுக்குக் கொஞ்சமும் மதிப்பு, மரியாதை கிடையாது. ஆகவே, உங்களுக்காகவும் கொஞ்சம் வாழுங்கள். தினமும் அரை மணி நேரமாவது மகிழ்ச்சியுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். இதுவே மகிழ்ச்சி.


www.gyaanaguru.com




## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

# ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

**தொகை அனுப்ப வேண்டிய முகவரி:**
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் -
9840903586, 7299753999



# காமத்திற்கு கணவனை ஏன் அலையவிடுகிறார்கள் பெண்கள்..?

பாலியல் பாடம்

தலையைத் தொடங்கப்போட்டுக்கொண்டு வந்தார் மகேந்திரன்.

''ஒரு குடும்பஸ்தன் என்றாலே ஆயிரத்தெட்டு பிரச்னைகள்.... இப்போது என்ன சிக்கல்?" என்று கேட்டார் ஞானகுரு.

"காலை முதல் இரவு வரை குடும்பத்துக்காகவே உழைக்கிறேன். இரவில் கொஞ்சநேரம் இன்பமாக இருக்கலாம் என்று மனைவியை நெருங்கினால் ஏதாவது காரணம் சொல்லி தள்ளிப்படுக்கிறாள்..." என்று முணுமுணுத்தார்.

''நீ அவளையும் அவளது ஆசைகளையும் புறக்கணித்தாய்... அதன் பலனை இப்போது அனுபவிக்கிறாய்..."


"அப்படியெல்லாம் நான் செய்யவில்லையே...?"

"நீ மட்டுமில்லை. எல்லா ஆண்களும் அப்படியே செய்கிறார்கள். முதல் இரவு அறைக்குள் பெண் ஆயிரத்தெட்டு கனவுகளுடன் வருகிறாள். அந்த காலகட்டத்தில் பருவ வயதின் குறுகுறுப்பு மட்டுமே


www.gyaanaguru.com

## பாலியல் பாடம்

> கணவன் விருப்பப்படுகிறான் என்று தெரிந்தாலும் தெரியாதவள் போன்று நடிக்கிறாள். வாய் விட்டு சொன்னாலும், ‘பூஜை, விரதம், பிள்ளைங்க இருக்காங்க’ என்று காரணம் சொல்லி விலகிச்செல்கிறாள். ஒரு வகையில் இது பழி வாங்குதல். பெண்ணை புரிந்துகொள்ளாத ஆணை அவள் காலம் முழுவதும் அலையவிட்டுக்கொண்டே இருப்பாள்...



அவளிடம் இருக்கிறது. அப்போது உடல் தேவை பற்றிய புரிதலின்றி பேரார்வத்துடன் இருக்கிறாள். அந்த வயதில் காமத்தின் அருமை, முழுமை அவளுக்குப் புரிவதில்லை.

இந்த காலகட்டத்தில் பெண்ணை வலுக் கட்டாயமாக பாலியலுக்கு உட்படுத்துவதே ஆண்மை என்று காலம் காலமாக ஆண்கள் மனதில் புதைக்கப்பட்டுள்ளது. ஆகவே, முதல் இரவில் அல்லது அடுத்த சில நாட்களில் பெண்களிடம் காமம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. அதிகார மாக பிரயோகிக் கப்படுகிறது. அவர்களின் விருப்பம், ஆசை, நேரம், நிலைகள் போன்ற எந்த கேள்வியையும் ஆண்கள் எதிர்பார்ப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் பெண்ணின் சம்மதம் கூட தேவையில்லாமல் பாலியல் வன்கொடுமை யாகவே தாம்பத்தியம் அரங்கேறுகிறது.

பருவ வயதுகளில் காமத்தின் மீது இருந்த ஆர்வம், எதிர்பார்ப்பு, ஆசை எல்லாமே ஆண்களின் முரட்டுத்தனத்துக்கு முன்பு ஒன்றுமே இல்லாமல் ஆகிவிடுகிறது. கட்டில் உறவு என்பது சுவாரஸ்யமற்ற உப்புச்சப்பற்ற விளையாட்டாக மாறிவிடுகிறது. சமைத்து வைத்த உணவை ஆண் மளமளவென சாப்பிடுவது போலவே உடலையும் வேகவேகமாக பிய்த்துத் தின்னுகிறான்.

எனவே, காமத்தில் பெண்ணுக்கு சுவாரஸ்யம் போய்விடுகிறது. ஆணின் ஆசையை நிறைவேற்றும் இயந்திரமாக தன் உடல் மாறிப்போவதை நினைத்து அசூயை அடைகிறாள். பெண்ணின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் மகிழ்ச்சியான பாலியல் உறவு என்பது கனவிலும் சினிமாவிலும் மட்டுமே சாத்தியம் என்பதாக மாறிவிடுகிறது.

ஆண்களுக்கு மரணம் வரையிலும் சலிப்பே தராத ஒன்றாக இந்த பாலியல் உறவு இருக்கிறது. ஆனால், பெண்ணுக்கு ஆரம்பத்தில் இருந்தே பாலியல் அனுபவம் திணிக்கப்பட்டதாகவும் கசப்பாகவும் இருக்கிறது. இந்த அனுபவத்தை மாற்று வதற்கு எந்த ஆணும் முன்வருவதில்லை. ஏனென்றால் ஆணுக்கு அவன் விருப்பத்தை, அவன் ஆசையை அவசரம் அவசரமாக நிறைவேற்றினால் போதும் என்ற எண்ணமே

> **மந்திரச்சொல்**
>
> “விவாதம் நீள்கிறது என்றால் இரண்டு பக்கமும் தெளிவில்லை என்றே அர்த்தம்”

காலம் முழுக்க நீடிக்கிறது.

தன்னுடைய விருப்பத்திற்கு கணவனிடம் ஒரு போதும் மதிப்பும் தீர்வும் கிடைக்காது என்ற உறுதியான முடிவுக்கு திருமணமான சில வருடங்களில் மனைவி வந்துவிடுகிறாள். இந்த தீர்மானத்தை கணவன் ஒருபோதும் கண்டுகொள் வதில்லை.

இந்த காலகட்டத்தில் யாரேனும் ஒருவர் பெண்ணின் அழகைப் புகழ்ந்தால், அவரது உடலுக்கு அலைந்தால் பெண் அவர் மீது கவரப்படுகிறாள். அவரிடமாவது தன்னுடைய ஆசை நிறைவேறும் என்று நம்புகிறாள். இந்த காரணத்தாலே பெரும்பாலான கள்ளத் தொடர்புகள் உண்டாகின்றன.

ஆனால், ஆண் எல்லா காலத்திலும் ஆணாகவே இருக்கிறான். கள்ளத் தொடர்பு முலம் வரும் ஆணும் ஒருபோதும் பெண்ணின் விருப்பத்திற்கு மதிப்பு தருவதில்லை. தன்னுடைய ஆசை நிறைவேறியதும் தூங்கிப் போவதற்கே ஆசைப்படுகிறான். அந்த அனுபவம் எப்படி இருந்தது என்று பெண்ணிடம் கேட்டு அறிவதற்குக்கூட ஆண் விரும்புவதில்லை.

அதனால், எந்த ஆணாலும் தன் ஆசையை நிறைவேற்ற முடியாது என்ற உண்மையைப் பெண் புரிந்துகொள்கிறாள். அதேநேரம், ஆண் மீது குற்றம் சாட்டுவதில்லை. அதற்குப் பதிலாக ஆண் உடம்பை பட்டினி போடுகிறாள். அவன் ஆசையாக நெருங்கப் போகிறான் என்று தெரிந்தாலே தள்ளிப் போகிறாள்.

கணவன் விருப்பப்படுகிறான் என்று தெரிந்தாலும் தெரியாதவள் போன்று நடிக்கிறாள். வாய் விட்டு சொன்னாலும், ‘பூஜை, விரதம், பிள்ளைங்க இருக்காங்க’ என்று காரணம் சொல்லி விலகிச்செல் கிறாள். ஒரு வகையில் இது பழி வாங்குதல். பெண்ணை புரிந்துகொள்ளாத ஆணை அவள் காலம் முழுவதும் அலையவிட்டுக்கொண்டே இருப்பாள்...’’ என்றார் ஞானகுரு.

“இதை எப்படி மாற்றுவது..?”

‘‘உன் ஆசையை மறந்துவிட்டு அவளுடைய ஆசையை தீர்த்துவைக்க முயற்சி செய். உன் ஆசை தானாக நிறைவேறும்” என்றார் ஞானகுரு.

தெளிவாகக் கிளம்பினார் மகேந்திரன்.


www.gyaanaguru.com

# உருவத்தால் வெற்றி தீர்மானிக்கப்படுவதில்லை




சுனில் காவஸ்கர், சச்சின் போன்ற ஜாம்பவான்கள் சராசரிக்கும் குறைவான உயரம் கொண்ட வர்கள். ஆனால், இந்தியாவின் சராசரி உயரம் குறைவு என்பதால் யாரும் அவர்கள் உருவத்தைப் பார்த்து கேலி செய்தது இல்லை.

ஆனால், தென்னாப்பிரிக்கா கிரிக்கெட் அணியின் கேப்டன் பவுமா உயரம் 5.31 அடி என்றாலும் அவரை குள்ளன் என்று கேலி செய்வார்கள். ஏனென்றால் தென்னாப்பிரிக்க வீரர்களின் சராசரி உயரம் 6.2 அடி. அது மட்டுமின்றி தென்னாப்பிரிக்க அணியில் கண்டிப்பாக இரண்டு கருப்பின வீரர்கள் இடம்பெற வேண்டும் என்ற விதி உள்ளது. அதனால் கோட்டாவில் வந்தார் என்றும் கிண்டல் செய்வார்கள்.

இந்த கிண்டல், கேலி, புறக்கணிப்புகளைத் தாண்டியே அணியில் இடம் பிடித்தார். அதன் பிறகும் அவருக்கு புறக்கணிப்புகள் இருந்தன. போட்டியில் சதம் அடித்து இருப்பார் ஆனால் அந்த புகைப்படத்தை போடாமல், அவர் அவுட் ஆகும் புகைப்படத்தை வைத்து இருப்பார்கள் இத்தனைக்கும் அந்த போட்டியில் தென்னாப்பிரிக்கா அணி வென்று இருக்கும்.


www.gyaanaguru.com

இந்த விமர்சனங்கள், குறிப்பாக அவரது ஆரம்ப காலத்தில், அவரது திறமையை மறைத்து, அவருக்கு அழுத்தத்தை ஏற்படுத்தின. ஆனால், பவுமா இவற்றை தனது ஆட்டத்தின் மூலம் தகர்த்தெறிந்து, 2016 இல் அயர்லாந்துக்கு எதிராக ஒருநாள் போட்டியில் சதமடித்து (113 ரன்கள்) தனது திறமையை நிரூபித்தார். 2023 உலகக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தென்னாப்பிரிக்க அணி சேஸிங்கில் தடுமாறி, 1 விக்கெட் வித்தியாசத்தில் வென்றபோது, அவர் "சேஸிங்கில் எந்த திட்டமும் இல்லை" என்று கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது. அது அவரது வெள்ளை மனதுக்கு ஒரு சான்று.

கடந்த 10 டெஸ்ட் போட்டிகளில் 2 சதங்கள் மற்றும் 2 அரைசதங்கள் அடித்து விமர்சகர்களுக்கு பதிலடி கொடுத்தார். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2025 இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி, தென்னாப் பிரிக்காவின் 27 ஆண்டு கோப்பை ஏக்கத்தை முடிவுக்கு கொண்டுவந்திருக்கிறார்.

நாங்கள் ஒடுக்கபடுத்தபட்டவர்கள் தானே தவிர திறமையற்றவர்கள் இல்லை. திறமையை வெளிப் படுத்த வாய்ப்பு கிடைக்காதவர்கள், கிடைக்கும் வாய்ப்புகளில் திறமையை முழுமையாக வெளிப் படுத்துபவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார் பவுமா. இந்த இறுதிப் போட்டியில் முதல் இன்னிங்சில் 74 ரன்கள் பின்தங்கியிருந்த நிலையில். இரண்டாவது இன்னிங்ஸில் 282 என்ற இலக்கை எட்டிப் பிடித்து வரலாற்று வெற்றியை பதிவு செய்தது தென்னாப் பிரிக்க அணி.

“நாங்கள் இறுதிப் போட்டிக்கு வந்த விதத்தில் சந்தேகங்கள் இருந்தன. இந்த வெற்றி அதை தீர்த்து வைத்து விட்டது. ஒரே தேசமாக நாம் இணைவதற்கான வாய்ப்பு இது. இந்த வெற்றியை நாம் அனைவரும் ஒன்றாகக் கொண்டாடுவோம்’ என்ற வெள்ளை

## மந்திரச்சொல்

மனம் தடுமாறும் நேரத்தில் திடமாக இல்லையெனில், காலம் முழுக்க துன்பம் அனுபவிக்க நேரிடும்.




மனதுடன் பேசியிருக்கிறார்.

யார் இந்த பவுமா..?

நிறவெறி தாண்டவமாடிய தென்னாப்பிரிக்காவில் 1990ம் ஆண்டு லங்காவில் பிறந்தவர் டெம்பா பவுமா. கேப்டவுனிலிருந்து சில கிலோ மீட்டர்கள் தொலைவில் இருக்கிறது லங்கா என்கிற ஊர். லங்கா ஓர் கருப்பர் நகரம். 99% கருப்பின மக்கள் மட்டுமே வாழக்கூடியப் பகுதி. கேப்டவுனில் வேலை பார்க்கக்கூடிய கருப்பினத்தவர்கள் அங்கே தங்க முடியாது. தங்களின் அன்றாடப் பணிகளை முடித்துவிட்டு அவர்கள் நகருக்கு வெளியே சென்றுவிட வேண்டும். அப்படி நகருக்கு வெளியே அவர்கள் குழுவாக தங்கியிருந்த இடம்தான் லங்கா. அங்கேதான் தெம்பா பவுமாவும் பிறந்தார்.


ஏழ்மை குடிகொண்டிருக்கும் பின் தங்கிய பகுதி. மக்கள் நிறவெறியால் அடக்கப்பட்டனர். அரசே அவர்களை ஒடுக்கியது. பவுமாவின் அப்பா ஒரு பத்திரிகையாளர். கிரிக்கெட் மீது பேரார்வம் கொண்ட உறவினர்கள் அவருக் குண்டு. இதனால் அந்த லங்காவின் இருளைக் கிழித்துக் கொண்டு வெளியே வர பவுமாவுக்கு ஒரு பிடிப்பு கிடைக்கிறது. ஆனாலும் கிரிக்கெட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அவர் நிறைய தடைகளை தாண்டி வர வேண்டியிருந்தது.

> கிரிக்கெட்டில் அவர் மிகப்பெரிய ஹிட்டர் கிடையாது என்றாலும், க்ளாஸாக விளையாடுவார். ஒவ்வொரு ரன்னுக்கும் உயிரைக் கொடுத்து உழைப்பைக் கொட்டும் தீர்க்கம் அவரிடம் இருந்தது. அதனால்தான் கடினமான பிட்ச்களில் அணிக்கு தேவையான பங்களிப்பை செய்துகொடுத்து தன்னுடைய இடத்தை நிலைப்படுத்திக் கொண்டார்.

வறுமை, கொடுமைக்கு இடையிலும் கிரிக்கெட்டை பவுமா கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். பவுமா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு ஆசிரியர், 'இன்னும் 15 ஆண்டுகளில் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?' என்பதை எழுதிக் கொடுங்கள் எனக் கூறியிருக்கிறார். 'இன்னும் 15 ஆண்டுகளில் தென்னாப்பிரிக்க அணியின் ஜெர்சியை அணிந்து கிரிக்கெட் ஆட வேண்டும். தென்னாப்பிரிக்க அணியில் இணைந்ததற்காக பிரதமரிடம் கைக்குலுக்கி வாழ்த்துப் பெற வேண்டும்.' என பவுமா தன்னுடைய கனவை எழுதியிருக்கிறார்.

அதேநேரம் கிரிக்கெட்டில் அவர் மிகப்பெரிய ஹிட்டர் கிடையாது என்றாலும், க்ளாஸாக விளையாடுவார். ஒவ்வொரு ரன்னுக்கும் உயிரைக் கொடுத்து உழைப்பைக் கொட்டும் தீர்க்கம் அவரிடம் இருந்தது. அதனால்தான் கடினமான பிட்ச்களில் அணிக்கு

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



தேவையான பங்களிப்பை செய்துகொடுத்து தன்னுடைய இடத்தை நிலைப்படுத்திக் கொண்டார்.

2016 இல் அவர் பிறந்த லங்காவுக்கு அருகே இருக்கும் நியூ லேண்ட் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக தன்னுடைய முதல் சதத்தை அடித்தார். தென்னாப்பிரிக்க கிரிக்கெட் வரலாற்றில் கருப்பின வீரர் ஒருவர் அடித்த முதல் சதம் அதுதான். மைதானத்தில் கூடியிருந்த லங்கா மக்கள் ஆனந்த கண்ணீர் விட்டு தங்களின் சாயலாக வென்று நிற்கும் பவுமாவை கொண்டாடினர்.

கருப்பினத்தவர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப் படுவதை தகர்க்கும் வகையில் தென்னாப்பிரிக்க கிரிக்கெட்டிலும் இட ஒதுக்கீடு முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தென்னாப்பிரிக்க அணியில் குறைந்தபட்சமாக 2 வீரர்களாவது கருப்பினத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த இட ஒதுக்கீடுதான் கிரிக்கெட்டில் கருப்பினத்தவர்களின் பங்களிப்பையும் உறுதி செய்தது.

தென்னாப்பிரிக்க தேசிய அணியில் இடம் பிடித்து, தனது முதல் அறிமுகபோட்டியிலேயே சதம் அடித்தார். சர்வதேச கிரிக்கெட் வீரராக மாறிய பிறகும், அவர் தனது குறுகிய உயரத்திற்காக தொடர்ந்து கேலி செய்யப்பட்டார். அப்போது தென்னாப்பிரிக்கா ஒரு ஐசிசி கோப்பையை கூட வெல்ல வில்லை. பின்னர் டெஸ்ட், ஒரு நாள், T20 ஆகிய மூன்றிலும் தென்னாப்பிரிக்க அணியின் கேப்டனாகவும் நியமிக்கப்பட்டார். அவர் தனது டி20 அணியை உலகக் கோப்பை இறுதிப் போட்டிவரை வழிநடத்தி துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவிடம் தோற்றார். இருப்பினும், அவர் நம்பிக்கையை இழக்கவில்லை,

இப்போது ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வலிமையான ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி தென்னாப்பிரிக்காவை வெற்றிக்கு அழைத்துச் சென்றுள்ளார். தெம்பா பவுமாவின் கதை உண்மையிலேயே உத்வேகம் அளிக்கிறது. எதுவும் இல்லாவிட்டாலும் நம்பிக்கையை இழக்கக்கூடாது என்று நம்மை ஊக்குவிக்கிறது. அவரிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.


தென்னாப்பிரிக்க அணி என்றாலே அதிர்ஷ்டமில்லாத அணி என்ற பெயர் உண்டு. ஏராளமான நட்சத்திர வீரர்கள் இருந்தாலும் இது வரை ஒரு ஐசிசி கோப்பையை கூட வென்றது கிடையாது, சவுத் ஆப்பிரிக்கா என்றால் அரையிறுதி, இறுதி போட்டி என்று வருவார்கள் அதன் பிறகு அவர்களாவே தோற்றுப் போவார்கள். தென்னாப் பிரிக்காவுக்கு இயற்கையும் சதி செய்ததுண்டு. வெற்றி பெறும் நிலையில் மழை குறுக்கிட்டு வெற்றியை திசை மாற்றிவிடும். டிஎல்எஸ் முறையில் எடுக்க இயலாத ரன்கள் இலக்காக வழங்கப்படும்.

இது போன்ற அத்தனை சிக்கல்களுக்கும் ஒரு வெற்றியைப் பதிலாகக் கொடுத்திருக்கிறார் பவுமா. நிறவெறி நிறைந்து இருக்கும் தேசத்தில் இருந்து வந்து இருக்கும் முதல் கறுப்பின கேப்டன் என்பது குறிப்பிடத்தக்கது.

இது மகத்தான சாதனை. அத்தனை விமர்சனங் களையும் உடைக்கும் சக்தி வெற்றிக்கு உண்டு என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார் பவுமா.








புதிய பார்வை, புதிய கண்ணோட்டத்தில்
இதிகாச நாவல்
ஞானகுரு பதிப்பகம் வெளியீடு
வண்ணப் புத்தகம் 600 ரூபாய்
கருப்பு வெள்ளை 300 ரூபாய்
இ-புக் 150 ரூபாய்
உங்கள் பிரதிக்கு 80725 89355 அழைக்கவும்
80725 89355 செல்போன் எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் க்யூ ஆர் கோடு மூலமாகவும், வங்கிக் கணக்கிலும் பணம் அனுப்பலாம்.
GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Account No. 548401010050639
எஸ்.கே.முருகன்
நெருப்பூ
சிகண்டியாக மாறிய அம்பையின் சரிதம்